முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1533

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.12.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார மகா சொரூபமே
   ஓங்கார சித்திமிகு ஞானகுருவே
   ஓங்காரன் என் அவதாரமே
   உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. வகைபட ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சோபகிருது தேள் திங்களில்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24 ம் நாள், 10.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
   திங்களில் அரங்கனுக்கு இன்னும் சக்தி கூடி
   திடமுற உலகோர்க்கு ஞானம் பயில
3. வகைபட அற்புதம் நடத்த
   வரமாக ஆறுமுகன் யான் நித்தம் நித்தம்
   நித்தம் நித்தம் ஒளி காட்சி சர்வ சூட்சுமம்
   நிலவுலகில் பரிபூரணமாய் தந்து வருகின்றேன்
4. அற்புதம்பட அரங்கனை நித்தம் காணும்
   அன்பர்களுக்கு ஞானபலமோடு ஆறுமுகன் என் ஆசியும் ஆற்றலும் கிட்டும்
   கிட்டவே அரங்கன் தர்மத்தை குவலயத்தில் தொடர்ந்து நடத்துகின்ற
   திட்டமுடன் வலுவான அன்பர்கட்கு தெரிவிப்பேன் தர்மபலம் கூடுவதோடு
5. தட்டாது அரங்கனோடு ஆறுமுகன் என்
   தக்க ஆசியும் நல் காட்சியும் கிட்டி இனிதே
   இனிதே உலகோர் ஞானவான்களாக
   இணைந்து அரங்கன் வழி தொடரும் அன்பர்களெல்லாம்
6. கனிவேலவன் என் தயவோடு
   கருணைபட இந்த பேருலகில் இயங்கி
   அழியாமை பெற்று சிறக்க நேரும்
   அரங்கன் வழி ஞானிகளாகவும் தேர்வுகொள்ள நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–